தேவர் தேவதை மொழி', ' இம்மண்ணுலகில் கல்லையும், மண்ணையும், புல்லையும், காணும் பொருள்கள் அனைத்தையும் கடவுள்களாக்கிடும் உயிர்ப்பு மொழி', 'இம்மண்ணுலகில் வழிபடு நிலையிலிருக்கும் கோயில்களுக்கு அருளாற்றல் குறைவு ஏற்படுவதை நிறைவு செய்யும் புத்துயிர்ப்பு மொழி', 'இம்மண்ணுலகில் மனிதனைக் கடவுளாக்கும் பூசை மொழியினை உடைய ஒரே ஓர் ஒப்புயர்வற்ற அருளாற்றல் மிகு மொழி', 'இம்மண்ணுலகில் மானுடர் கடவுள்களையும், தெய்வங்களையும், தேவர் தேவதைகளையும், மற்ற அருளுலகத்தவர்களையும் காணுவதற்கு விழியாக, வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக இருக்கின்ற ஒரே ஓர் ஒப்புயர்வற்ற மொழி அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான்' ...... என்ற பேருண்மைகளை அநுபவப் பொருளாக விளக்கிக் காட்டுபவர்கள்தான் அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியாரால் உருவாக்கப்பட்டு வருகின்ற மேற்படி நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட்பட்டத்தவர்கள், அருட்கலைஞர்கள்.

10. 'கடவுள் தமிழுக்கும்', 'தெய்வத் தமிழுக்கும்', 'தேவத் தமிழுக்கும்', 'வேதத் தமிழுக்கும்', 'வாழையடி வாழையெனப் பாரம்பரியமாகத் தலைமையேற்று வரும் அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அவர்கள் தம் காலத்தில் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியின் மூலம் கோயில் கருவறை ஊழியக்காரர்களான பூசாறி, குரு, குருக்கல், குருமார்,..... முதலிய நால்வர் முதல் உடுக்கையடிக்கும் பூசாறி, முத்துக் குறி சோதிடர், கிளி சோதிடர், அருளாளர், அருளாளி, அருளாடு நாயகம், மருளாளர், மருளாளி, மருளாடு நாயகம்,..... முதலியவர்களையெல்லாம் உருவாக்கி நோயாளிகளுக்கும், பேயாளிகளுக்கும் நலமளிக்கும் 'சித்தர் கருவூறார் அருட்கோட்டங்கள்', 'சித்தர் கருவூறார் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்கள்', 'சித்தர் கருவூறார் தமிழ் தெய்வீக மருத்துவ மனைகள்', ... முதலியவைகளை எல்லாம் நிகழ்த்தி வருகிறார். பொதுமக்கள் நாள், கோள், மீன் பாதிப்புகளாலும்; இராசி பாதிப்புகளாலும், நாகப் பாதிப்புகளாலும்; (1) காற்று, (2) கருப்பு (3) பேய் (4) பிசாசு (5) பில்லி (6) சூனியம் (7)ஏவல் (8) செய்வினை (9) வைப்பு (10) கழிப்பு (11) மருந்து (12) கண்ணேறு முதலிய பாதிப்புகளாலும் தொல்லையுற்றுத் துன்புறுவதிலிருந்து பாதுகாக்கும் பணியினை தமிழ் மொழி மூலம் நிகழ்த்தி வருகிறார். இதன் மூலம்தான் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்கள் அருளுலகத்தவரின் வரிவடிவங்களேயாகும்; தமிழ்ச் சொற்களின் ஒலி நயங்கள் அருளுலகத்தவர்கள் வழங்கும் அருட்கொடைகளாகும் என்ற பேருண்மையினை நிலைநாட்டி வருகிறார்; இக்கடவுட் தமிழுக்கும், தெய்வத்தமிழுக்கும், தேவத் தமிழுக்கும், வேதத் தமிழுக்கும் உரிய மெய்ஞ்ஞானசபைத் தலைவராக விளங்கும் அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகி அவர்கள். ... ... ... ... ...


**காயந்திரி பற்றி பிருமணர்கள் தரும் கற்பனைக் கதைக்கு விளக்கம்**

**பதினெண்சித்தர்கள் ஆண், பெண், சிறியவர், பெரியவர், ஏழை, பணக்காரர் .... என்ற வேறுபாடுகள் எதுவுமில்லாமல் அனைவரும் அருளை அநுபவப் பொருளாகப் பெற வேண்டுமென்பதற்காகவே, 1) காயந்திரி மந்திரம், 2) காயந்திரி மந்தரம், 3) காயந்திரி மந்திறம், 4) காயந்திரி மாந்தரம், 5) காயந்திரி மாந்தரீகம் என்ற ஐந்தினையும் இம்மண்ணுலகுக்கு வழங்குகிறார்கள். இந்த ஐந்தில் காயந்திரி மந்தரம் என்பதை ஆரம்ப நிலையாக, கருவாய் நிலையாக, தாய்நிலையாக, பயிற்சி நிலையாக.... .... வழங்கி யார் வேண்டுமானாலும், எந்த நேரத்தில் வேண்டுமானாலும், என்ன வேலையைச் செய்து கொண்டிருந்தாலும் தொடர்ந்து 108 முறை கூறி ஓர் அருள் மாலையை அருளுலகுக்கு வழங்கலாம். இதன் மூலம், பத்தி, சத்தி, சித்தி, முத்தி எனும் நான்கினையும் படிப்படியாகப் பெறலாம்.**

**இவை மனிதனுக்கு அனைத்து வகையான சத்திகளைத் தருவதால், 'சத்தி காயந்திரி' எனப் பெயரிடப் பட்டன. ஆனால், *ஆரியர்கள் சத்தி காயந்திரி என்ற சொல்லை வைத்துக் கொண்டு காயந்திரி மந்தரத்திற்காக காயத்திரி என்ற பெண் தேவதையை கற்பனை செய்து விட்டார்கள்.* அந்த தேவதைக்கு ஐந்து தலைகள் இருப்பதாகவும், குறிப்பிட்ட ஆயுதம் இருப்பதாகவும், தாமரை மேல் அமர்ந்திருப்பதாகவும் கூறி விட்டார்கள். இவையனைத்தும் கட்டுக் கதைகளே. மேலே குறிப்பிட்டது போல் காயந்திரிகள்; மந்தரம், மந்திரம், மந்திறம், மாந்தரம், மாந்தரீகம் எனும் ஐந்து வகைப்பட்டவையே தவிர ஐந்து தலைகள் உடைய பெண் கடவுள் அல்ல.**







# ஞானாச்சாரியார்
# ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்
# அவர்களின் எழுத்துக்கள்

## மாசி மாத வெளியீடு

**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த**
**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,112**

## மாசி அமாவாசை சிவராத்திரி சிறப்பிதழ்

**இந்த இதழின் உள்ளடக்கம் அன்றாடப் பூசைகளுக்குப் பயன்படுத்தும் பூசைமொழிகளாகத் தரப்படுகின்றன.**


1. சிவபுராணம்
2. அருட்சினை மந்திறம்
3. சத்தி காயந்திரி மந்தரம்
4. சத்தி காயந்திரி மந்திரம்
5. கற்பூரச் சோதி வழிபாட்டு மந்தரம்
6. காயந்திரிகளைப் பயன்படுத்தி அன்றாடம் பூசை செய்யும் முறை விளக்கம்
7. சிவராத்திரி பற்றிய சுருக்க விளக்கம்
8. சீவகாயந்திரி மந்திரம்


www.indhuism.org;
Email: indhuism@gmail.com

# அன்றாட வழிபாட்டுக்குரிய பூசைமொழிகள்

*சிவபுராணம் எந்த வேலையைச் செய்து கொண்டிருந்தாலும், அந்த வேலையைச் செய்து கொண்டே அன்றாடம் ஒரு முறையாவது கூறிட வேண்டும். அல்லது பிறர் கூறக் கூற அவர் பின்னாலேயே கூறிடலாம். சிவபுராணம் கூறுவதால் அருளணுக்கள் படிப்படியாக ஒவ்வொருவர்க்குள்ளும் நிறைந்திடும்.*

## சிவபுராணம்

“ஓம் குரு வாழ்க! குருவே துணை! குருவே எல்லாம்!

ஓம் நமச்சிவாய வாழ்க!; நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில்; நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட; குருமணி தன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று; அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன்; இறைவன் அடி வாழ்க!

வேகம் கெடுத்து ஆண்ட; வேந்தன் அடி வெல்க!
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன் தன்; பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன் தன்; பூங்கழல்கள் வெல்க!
கரம் குவிவார் உள்மகிழும்; கோன்கழல்கள் வெல்க!
சிரம் குவிவார் ஓங்குவிக்கும்; சீரோன்கழல் வெல்க!

ஈசன் அடி போற்றி!; எந்தை அடி போற்றி!
தேசன் அடி போற்றி!; சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற; நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பு அறுக்கும்; மன்னன் அடி போற்றி!
சீரார் பெருந்துறை நம்; தேவன் அடி போற்றி!
ஆராத இன்பம்; அருளும் மலை போற்றி!

சிவன் அவன் என்சிந்தையுள்; நின்ற அதனால்
அவன் அருளாலே; அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச்; சிவபுராணம் தன்னை
முந்தைவினை முழுதும்; ஓய உரைப்பன் யான்.

கண்நுதலான் தன் கருணைக்; கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா; எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண்நிறைந்தும் மண்நிறைந்தும்; மிக்காய் விளங்கு ஒளியாய்
எண்நிறைந்தும் எல்லை; இலாதானே!, நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன்; புகழுமாறு ஒன்று அறியேன்.

புல் ஆகிப் பூடாய்ப்; புழுவாய் மரம் ஆகிப்
பல்விருகம் ஆகிப்; பறவையாய் பாம்பு ஆகிக்
கல்லாய் மனிதராய்ப்; பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி; முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற; இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து; இளைத்தேன் எம்பெருமான்!



தேய் கலைகள், (7) ஓய் கலைகள், (8) மாய் கலைகள், (9) ஆய் கலைகள் எனும் ஒன்பதும் குவலய குருபீடமான பதினெண் சித்தர் மடத்துக்கும் பீடத்துக்கும் உரிய கருகுலத்தின் இந்து வேத பாடசாலையில் முறையாகக் கற்றுத்தரப் படுகின்றன.

8. இவை, ஏட்டறிவாகப் பொது மக்களுக்கு வழங்கப்படுவதோடு; தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள பெரிய நந்தியின் வாயிலுள்ள பன்னிரண்டு பற்களின் விளக்கமான (1) காற்று, (2) கருப்பு, (3) பேய், (4) பிசாசு, (5) பில்லி, (6) சூனியம், (7) ஏவல், (8) செய்வினை, (9) வைப்பு, (10) கழிப்பு, (11) மருந்து, (12) கண்ணேறு எனும் பன்னிரண்டு வகைப்பட்ட பாதிப்புகளால்; மனித வாழ்க்கை மாட்டுப்பற்களுக்கிடையில் அகப்பட்ட புற்கள் போல் கசக்கப்பட்டு, நசுக்கப்பட்டுச் சிதைத்து அரைக்கப் படுவதிலிருந்து காப்பாற்றும் பணியை இக்கருகுலத்தில் தயாராகின்ற நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட்பட்டத்தவர்கள் காத்திடும் பணி தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது, தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது, தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. அதாவது, இந்த மண்ணுலகு; இதனைச் சுற்றியுள்ள கோள்கள் ஒன்பதினாலும், இராசிகள் பன்னிரண்டினாலும், மீன்கள் இருபத்தியேழினாலும்,,, ஆக மொத்தம் (9 + 12 + 27 = 48) நாற்பத்தெட்டு வகையான விண்வெளிச் சத்திகளின் ஆட்சிக்கு உட்பட்டு இருக்கிறது என்பதுதான் உண்மை. இந்தப் பேருண்மையினை, அண்டபேரண்டமாளும் பதினெண் சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியும்; அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் அருட்கல்வியை (சாகாக் கல்வியை) வழங்கி; இச்சாகாக் கல்வி கற்று பயிற்சி, முயற்சி, தேர்ச்சி, முதிர்ச்சி பெறுபவர்களின் நிலைகளுக்கேற்ப நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட்பட்டங்களை வழங்கும் அருளுலகப் பல்கலைக் கழகப் பாடத்திட்டத்தினை (The curricular system of the Divine Educational University) வகுத்துள்ளார்கள். இதன் படியே, கடந்த நான்கு யுகங்களாக ஆதிசிவனார் முதல் இன்று வாழும் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி வரை முறையாகக் ‘குருகுலம்’, ‘திருகுலம்’, ‘தருகுலம்’, ‘கருகுலம்’ எனும் நான்கினையும் தேவைக்கேற்ப நிறுவி நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட்பட்டத்துக்கும் உரியவர்களை உருவாக்கி வருகிறார்கள். எனவேதான், இம்மண்ணுலகில் அருட்பயிரினங்கள் முழுமையாக அழிந்தொழிந்து அருளுலகம் பாலைவனம் ஆகிவிடாமல் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதாவது, அருளூறு அமுதத் தெய்வீகத் தமிழ் மொழி அருளாற்றலினை ஊற்றெடுத்து ஆற்றுப் பெருக்காக வற்றாது ஓடச் செய்வதனால்தான்; இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியின் அருளாற்றின் வற்றாத அருள் நீர்க் கொடையால் அருட்பயிரினங்கள், உயிரினங்கள் பசுமையாகச் செழித்து வாழுகின்றன, வாழுகின்றன, வாழுகின்றன. இதுதான், உலகப் பேருண்மை, உலகப் பேருண்மை, உலகப் பேருண்மை.

9. இந்த உலகப் பேருண்மையின் சான்றாகவும், ஊன்றாகவும்தான்; இன்றைக்குப் பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதியாகவும், பீடத்தின் பீடாதிபதியாகவும் உள்ள அண்டபேரண்ட அனாதிஆதி சத்திகள் சன்னிதானம், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், நிறையக்ஞர், அருட்கொடை வள்ளல், அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியின் மெய்ஞ்ஞான சபைத் தலைவர், குவலய குருபீடம், குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் முறையாக குருகுலம், திருகுலம், தருகுலம், கருகுலம் நிறுவிச் செயல்பட்டு வருகிறார். இவரே, ஆச்சாரியாராகவும், போதகராகவும், சாதகராகவும் இருந்து அருட்கல்வி வழங்கி சன்னிதானங்கள், ஆதீனங்கள், தம்பிரான்கள், பண்டாரங்கள், பண்டார சந்நதிகள், பண்டார சந்நிதிகள், ஆச்சாரியார்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகள், அரியவாள்கள், சூரியவாள்கள், சீரிய வாள்கள், பெரிய வாள்கள், நேரிய வாள்கள், வீரிய வாள்கள், ஏமகோடிப் பீடங்கள், சோமகோடிப் பீடங்கள், வாமகோடிப் பீடங்கள், ... முதலிய அவசர அவசியத் தேவைக்குரிய அருட்பட்டத்தவர்களை (அருட்கலைஞர்களை) உருவாக்கி அருளுலகப் பொருளுலக இருளகற்றி வருகின்றார். இந்த அருட்பட்டத்தவர்களே அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான்; ‘இம்மண்ணுலகின் முதல்மொழி’, இம்மண்ணுலகின் மூலமொழி’, ‘இம்மண்ணுலகின் அருள்மொழி’, ‘இம்மண்ணுலகின் சாகக் கல்விக்குரிய மொழி’, ‘இம்மண்ணுலகக் கடவுளர் மொழி’, ‘இம்மண்ணுலகத்

## “கடவுள் தமிழ், தெய்வத் தமிழ், தேவத் தமிழ், வேதத் தமிழ்” என்ற குருதேவரின் நூலிலிருந்து சில பத்திகள்:

5. இந்த நாட்டின் மதவாதிகள், சமயவாதிகள், பத்தியாளர்கள் எனப்படுபவர்கள் ஏறத்தாழத் தமிழ் மொழி வழியாகத் தங்களுடைய அன்றாட பூசைகளைக் கூட நடத்தத் தெரியாதவர்களாக!; நடத்த அறியாதவர்களாக!; நடத்தப் புரியாதவர்களாக!; நடத்தத் துணிவு இல்லாதவர்களாகவே! இருந்தார்கள்!, இருந்தார்கள்!, இருந்தார்கள்!; இருக்கிறார்கள், இருக்கிறார்கள், இருக்கிறார்கள்; அநேகமாக இருப்பார்கள், இருப்பார்கள், இருப்பார்கள். ஏனென்றால், இவர்களில் பெரும்பாலானவர்களுக்குத் தமிழ் மொழியின் வரலாறும் தெரியாது; தமிழிலக்கியத்தின் வரலாறும் தெரியாது.

மேலும் இவர்களில் எவருக்குமே இந்து, இந்துவேதம், இந்தியம், இந்துவேத மதமான இந்துமதம், இந்தியா,... முதலிய சொற்கள் தூய உயர்தனிச் செந்தமிழ்ச் சொற்கள் என்ற பேருண்மையைத் தெரியாதவர்களாகவும், தெரிந்தாலும் ஒப்புக் கொள்ள முடியாதவர்களாகவும் இருக்கிறார்கள். அதாவது, இத்திருநாட்டின் மதவாதிகளும், சமூகவாதிகளும், பத்தியாளர்களும்;

‘தமிழ் மொழியில்தான் வேதம் இருக்கிறது’;
‘தமிழ்மொழிதான் தேவமொழி’;
‘தமிழ்மொழிதான் தெய்வமொழி’;
‘தமிழ்மொழிதான் கடவுள் மொழி’;
‘தமிழ்மொழிதான் இந்த உலகின் முதல்மொழி’;
‘தமிழ்மொழிதான் இந்த உலக மொழிகளுக்கெல்லாம் மூலமொழி’;
‘தமிழ் மொழிதான் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழி’;
‘தமிழ் மொழிதான் அருளை மருந்தாகவும், விருந்தாகவும் விளைவித்துத் தரக் கூடிய மொழி’;
‘தமிழ் மொழிதான் மனிதர்களைக் கடவுளாக்கும் மொழி’;
‘தமிழ் மொழிதான் கடவுள்களை நேரில் மனிதர்களுக்கு உதவச் செய்யும் மொழி’;
‘தமிழ்மொழிதான் கல்லையும், மண்ணையும், புல்லையும், செடிகொடி மரங்களையும், காணும் பொருள்களையும் கடவுள் ஆற்றல் ஊற்றெடுக்கும் அருளூற்றுக்களாக உருவாக்கித் தரக் கூடிய மொழி!’ ...

என்ற பேருண்மைகளைத் தெரியவோ!?; அறியவோ!?; ஆராயவோ!?; புரியவோ!?; உணரவோ!?; ஒப்புக் கொள்ளவோ!?; நம்பவோ!? முடியாத அப்பாவிகளாக, அப்பாவிகளாக, அப்பாவிகளாக, அப்பாவிகளாகவே இருக்கிறார்கள், இருக்கிறார்கள், இருக்கிறார்கள்.

எனவேதான், பதினெண் சித்தர் மடம் இந்தப் புத்தகத்தை அவசர அவசியமாக வெளியிடுகிறது.

6. இப்பதினெண் சித்தர் மடமும், பீடமும்தான்; அருளுலகின் மூலமாக, முதலாக, பிறப்பிடமாக, இருப்பிடமாக, காப்பிடமாக இருந்து வருகிறது. எனவேதான், இம்மண்ணுலகில் அருட்பயிரினங்களின் நாற்றங்கால்களாகவும், நாற்றுப்பண்ணைகளாகவும், விதைப்பண்ணைகளாகவும் தமிழர்களின் உள்ளங்களும், இல்லங்களும் தொடர்ந்து செயல்படும் அரிய பெரிய நிலை நிலைநிறுத்தப்பட்டு வருகிறது.

7. அண்டபேரண்ட அருளாட்சி நிகழ்த்திவரும் பதினெண் சித்தர்களுடைய தாய்மொழியும்; அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான; அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் அருளை அநுபவப் பொருளாக விளைவித்துத் தேவையானவர்களுக்கு மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கிடும் அருட்கலைகள் இருக்கின்றன. இவற்றுள் (1) கடவுட் கலைகள், (2) தெய்வீகக் கலைகள், (3) தேவதைக் கலைகள், (4) பேய்க் கலைகள், (5) நோய்க் கலைகள், (6)



மெய்யே! உன்பொன் அடிகள்; கண்டு இன்று வீடுற்றேன்.
உய்ய என் உள்ளத்துள்; ஓங்காரமாய் நின்ற
மெய்யா! விமலா!; விடைப்பாகா! வேதங்கள்;
ஐயா!, என ஓங்கி; ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே!

வெய்யாய்! தணியாய்!; இயமானனும் விமலா!
பொய் ஆயின எல்லாம்; போய் அகல வந்து அருளி
மெய்ஞ்ஞானம் ஆகி; மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன்; இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை; அகல்விக்கும் நல் அறிவே!

ஆக்கம் அளவு இறுதி; இல்லாய் அனைத்து உலகும்
ஆக்குவாய்! காப்பாய்!; அழிப்பாய்!, அருள் தருவாய்!
போக்குவாய்! என்னைப்; புகுவிப்பாய் நின் தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய்!; சேயாய்! நணியானே!
மாற்றம் மனம் கழிய; நின்ற மறையோனே!

கறந்த பால் கன்னலொடு; நெய் கலந்தாற் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள்; தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும்; எங்கள் பெருமான்!
நிறங்கள் ஓர் ஐந்துடையாய்; விண்ணோர்கள் ஏத்த
மறைந்து இருந்தாய் எம் பெருமான்; வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய; மாய இருளை
அறம் பாவம் என்னும்; அரும் கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும்; புழு அழுக்கு மூடி
மலம் சோரும்; ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும்; வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால்; விமலா! உனக்குக்
கலந்த அன்பாகிக்; கசிந்து உள் உருகிடும்
நலம்தான் இலாத; சிறியேற்கு நல்கிட
நிலம்தன் மேல் வந்து அருளி; நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க்; கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்ததொரு; தயாவான தத்துவனே!

மாசு அற்ற சோதி; மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேனார்; அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்று அறுத்துப்; பாரிக்கும் ஆரியனே!
நேச அருள் புரிந்து; நெஞ்சினில் வஞ்சம் கெடப்
பேராது நின்றதொரு; பெரும் கருணைப் பேராறே!

ஆரா அமுதே!; அளவிலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்துள்; ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கி; என் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும்; இல்லானே! உள்ளானே!

அன்பருக்கு அன்பனே!; யாவையுமாய் அல்லையுமாய்ச்

சோதியனே! துன் இருளே!; தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம்; நடுவு ஆகி அல்லானே!
ஈர்த்து என்னை ஆட்கொண்ட; எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால்; கொண்டு உணர்வார்தம் கருத்தின்
நோக்கு அரிய நோக்கே!; நுணுக்கு அரிய நுண் உணர்வே!

போக்கும் வரவும்; புணர்வும் இலாப் புண்ணியனே!
காக்கும் எம் காவலனே!; காண்பரிய பேர் ஒளியே!
ஆற்று இன்ப வெள்ளமே!; அத்தா! மிக்காய் நின்ற!
தோற்றச் சுடர் ஒளியாய்!; சொல்லாத நுண் உணர்வாய்!
மாற்றமாம் வையகத்தின்; வெவ்வேறே! வந்து அறிவாம்
தேற்றனே! தேற்றத்; தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார்; அமுதே! உடையானே!

வேற்று விகார; விடக்குடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா!; அரனே ஓ! என்று என்று
போற்றிப் புகழ்ந்து இருந்து; பொய் கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து; வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக் குரம்பை; கட்டு அழிக்க வல்லானே!
நள் இருளில் நட்டம்; பயின்று ஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே!; தென்பாண்டி நாட்டானே!
அல்லற்பிறவி; அறுப்பானே! ஓ! என்று
சொல்லற்கு அரியானைச்; சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின்; பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின்; உள்ளார் சிவன் அடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.
ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!”

**சிவபெருமான் துதி**

“ஓம் அர அற நமப்பார்வதி பாதமே போற்றி!
ஓம் அர அற மகாதேவப் பாதமே போற்றி!
தென்னாடுடைய சீவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!”

**ஞான வணக்கம்**

“ஓம் புத்தம் கச்சாமி! ஓம் சங்கம் கச்சாமி!
ஓம் சரணம் கச்சாமி! ஓம் தருமம் கச்சாமி!
ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

ஓம் புத்தம் சரணம் கச்சாமி!
ஓம் சங்கம் சரணம் கச்சாமி!
ஓம் தருமம் சரணம் கச்சாமி!
ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

ஓம் புத்தம் சங்கம் சரணம் தருமம் கச்சாமி!
ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!”

**குறிப்பு:- புத்தம் = ஞான வழி**



**சீவகாயந்திரி மந்திரம்**

“தத்துவப் பிறப்பாய வித்தே! மகேசா!
மகாதேவே! நீ தீயேயாகி
தன்னோடு உருத்திரப் பிறப்பைச் சாதித்தாய்;
என்னோடு உன்னோடன்றி எங்கும் அருளூற
ஓம் நமச்சிவாய சிவாயநம ஒலியருளினாய்;
தழைத்தெழுநீ! நாங்கள் பிழைத்தெழ அருளுநீ!
அழைக்கிறோம்! செழுந்தீயே செழித்தெழுநீ!
வாசிவாசி! வாசிவாசி! வாசிவாசி!
வசிவசி! வசிவசி! வசிவசி!
ஓம் காயந்திரிந்து சிவமாகட்டும்;
ஓம் ஆவி ஆன்மா ஆருயிர் ஒன்றாகட்டும்;
தத்துவமே நமச்சிவாய மென்றுணர்ந்தோம்
சித்தாந்தமே சிவாயநம வென்றுணர்ந்தோம்
நங்! மங்! சிங்! வாங்! யங்!
காத்தருளுக! காத்தருளுக! காத்தருளுக!
ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!”

*சீவ காயந்திரி மந்திரம் ஓதுபவர்கள் இலிங்க வடிவம், அல்லது ஐங்கோணச் சக்கரம், அல்லது (தட்சிணா மூர்த்தி) குரு வடிவ ஓவியம், அல்லது புகை எழுப்பி, அல்லது ஒளி விளக்கேற்றி, அல்லது சூரிய சந்திர ஒளி பார்த்து சீவனான சிவனை வழிபடுங்கால் கூறி அருட்பயனைத் துய்க்கலாம். இதனைக் கூறும் போது ஏதாவது படையல் படைக்கப் படல் வேண்டும். இதனைக் கூறுபவர்கள் ஆரம்பத்திலும், இறுதியிலும் கறிவேப்பிலை இலைகள் சிலவாவது சாப்பிட வேண்டும். (சீவகாயந்திரி பற்றிய விளக்கக் கட்டுரைகள் குருதேவர் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களால் எழுதப்பட்டு கையெழுத்துப் பிறதி நூலகத்தில் உள்ளன. ஆர்வமுள்ளவர்கள் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயன்பெறுங்கள்.)*

-----------------------------------------------------------

**இந்துமத வரலாற்றுப் பேருண்மைகள்**

**பிறப்பிடம்** : ‘இளமுறியாக் கண்டம்’ (The Lost Lemuria) எனும் கடலுள் மறைந்த ‘குமரிக்கண்டம்’
**காலம்** : பதினெண் சித்தர்களால் அனாதிக் காலத்தில், அதாவது கி.மு. 43,71,101 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப் பட்டது.
**மொழி** : தமிழ் மொழி
**வழிபாட்டு நிலையம்**: 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்
**இந்துமதக் காவலர்**: 48 பதினெண் சித்தர் பீடாதிபதிகள்
**இந்துமதம் வளர்ப்பவர்**: இம்மண்ணுலகில் தோன்றும் 48 வகைச் சித்தர்கள், கருப்புகள், வழிபடு நிலையினர்கள், கருவறை மூலவர்கள், அருளாளர்கள், மருளாளர்கள், அருளாளிகள், மருளாளிகள், அருளாடு நாயகங்கள், மருளாடு நாயகங்கள், மூவகை ஆச்சாரியார்கள்...... எனப் பலர்.
**இந்துமத நூல்கள்**: 108 பூசைமொழிகள், 48 மூல நூல்கள்
**இந்துமதப் பயன்கள்**: தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.
***இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.***
அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வே.
அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.

**ஆதாரம்**: மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்.

பட்ட மனதையுடைய **மனிதர்**களாக மாறிட்டவர்களுக்கு முதன்முதல் அருட்பட்டங்கள் வழங்கிட்ட இரவு.

12. ஆதிசிவனார் விலங்குகளோடு விலங்குகளாகத் திரிந்திட்ட மணீசர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கைக்குரியவர்களை அழைத்து முத்தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து கல்வி கற்பித்திட ஆரம்பித்திட்ட இரவு.

13. இருக்கு வேதம் முறையாக அசுர வேதம், அதர்வான வேதம், யாம வேதம் என்று மேலும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு; இந்த மண்ணுலகில் மட்டுமே நான்வேதமாக வடிவப்பட்டு, 1359 அண்டங்களுக்கும் அறிவிக்கப்பட்ட இரவு.

14) இந்த ஞாலம் எரிகின்ற நெருப்புக்கோளமாக இருந்து எரிதல் அடங்கி கங்காக, நெருப்புக் கனலாக மாறியதும், நெருப்புக் கனல் பனிக்கட்டியாக மாறியதும், பனிக்கட்டி நீராக மாறியதும், நீர் நிலமாக மாறியதும், நிலத்தில் உயிரணுக்கள் தோன்ற ஆரம்பித்ததும் இந்த சிவராத்திரி எனப்படுகின்ற மாசி மாதம் தேய்பிறையில் சதுர்த்தசி இரவு பதினான்கு நாழிகைக்குரிய இலிங்க வடிவ கால இரவே மகாசிவராத்திரி என்று குறிப்பிடுகிறார்கள். அதாவது ஆவி, ஆருயிர், ஆன்மா என்ற மூன்றும் ஒருங்கிணைந்து இலிங்க வடிவில் சீவன் உருவான இரவே சீவராத்திரி எனும் சிவராத்திரியாகும். அதாவது இந்தச் சீவன்தான் அருவுருவ நிலையிலிருந்து உருவநிலை பெற்று மணீசனாக மாறிற்று. இப்படி மணீசன் தோன்றுவதற்குரிய சீவன் தோன்றிய இரவு சீவ இரவு. அதுவே சீவராத்திரி, சிவராத்திரி என்று அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்கள் குறிக்கின்றார்கள்.

## சிவராத்திரி அன்று செய்ய வேண்டியது:

எனவே, இந்துக்கள் அனைவரும் மகா சிவராத்திரி அன்று காலையிலிருந்து மறுநாள் காலை வரை உள்ள 24 மணி நேரத்தில், ஒரு சில மணித்துளிகளாவது தங்கள் ஊரில் உள்ள சுடுகாட்டிற்குச் சென்று நமது இந்துமதக் கடவுளர்களுக்கெல்லாம் கடவுளாக இருக்கின்ற சிவபெருமானை கும்பிட்டு வரவேண்டும். அத்துடன் தங்களுடைய மாண்டுபோன முன்னோர்களை நினைத்து அவர்களுக்கு விருப்பமான பலகாரங்களையும் உணவு வகைகளையும் சமைத்து எடுத்துக் கொண்டு, தேங்காய் பழம் பூ ஊதுபத்தி, கற்பூரம், சாம்பிராணி, வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, சந்தனம், குங்குமம், திருநீறு, மஞ்சள் முதலியவைகளை எல்லாம் எடுத்துச் சென்று சுடுகாட்டில் ஏதேனும் ஓரிடத்தில் தண்ணீர் தெளித்து சாணமிட்டு மெழுகி, மாக்கோலம் போட்டு நெய்விளக்கு ஏற்றி, எல்லாவற்றையும் தலைவாழை இலை போட்டு படைத்து விட்டு, படைத்த உணவில் எல்லாவற்றிலும் சிறிது அங்கே எடுத்து வைத்து விட்டு மீதியை எடுத்துக் கொண்டு நேராக சிவன் கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

அங்குக் கொடிமரத்தின் முன் அனைத்தையும் வைத்து விட்டு, தங்களுக்குத் தெரிந்த சிவன் பாடலை (சிவபுராணம்) அல்லது சீவகாயந்திரியை உரத்த குரலில் ஓதியபடியே ஐந்து முறை வலம் வர வேண்டும். பின் பலிபீடம் நந்தியையும் கும்பிட்டு விட்டு நேராக அம்மன் சன்னதிக்கு சென்று வழிபட வேண்டும். பிறகு கருவறையில் உள்ள சிவனை வழிபட வேண்டும். அதன்பிறகு மற்ற தெய்வங்களை வணங்கி விட்டு கோயிலில் உள்ள குரு, குருக்கள், குருமார், பூசாரி, அர்ச்சகர் என்றுள்ள அனைவரின் காலைத் தொட்டு விழுந்து கும்பிட்டு வாழ்த்துப் பெற்று வீடு திரும்ப வேண்டும்.

வீட்டிற்கு வந்தபின் குத்து விளக்கு ஏற்றி ஊதுபத்தி அல்லது சாம்பிராணி புகையிட்டு சிவபெருமானையும், தங்களுடைய மாண்டுபோன தங்களது குல முதல்வர்களையும் (குல தெய்வங்களையும்) நினைத்துச் சிறிது நேரம் பூசையில் அமர்ந்த பின் அந்தப் படையலை அனைவரும் உண்ணலாம். மற்றவருக்கும் தரலாம்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்



**சங்கம் = நிறுவன வழி**
**சரணம் = பணிவு வழி;**
**தருமம் = பிறருக்குத் தருகின்ற வழி**
**கச்சாமி = கச்சு ஆமி = உறுதி நிலையில் செயல்படல்**

***ஞானாச்சாரியார்கள் இப்படி ஆழ்ந்த பொருளுடைய சொற்களைப் பூசாமொழி வாசகத்தில் பயன்படுத்தியிருக்கிறார்கள்.***

**ஓம் பிள்ளையார் வணக்கம்**

"ஐந்து கரத்தானை; யானை முகத்தானை
இந்தின் இளம்பிறை; போலும் எயிற்றானை
நந்தி மகன் தனை; ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி; போற்றுகின்றேனே.

முன்னவனே! யானை முகத்தவனே! முத்தி நலம்
சொன்னவனே! தூய்மெய்ச் சுகத்தவனே! மன்னவனே!
சிற்பரனே! ஐங்கரனே! செஞ்சடையார் சேகரனே!
தற்பரனே! நின் தாள் சரண்."

**அருட்பா துதி**

"ஓம் அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!
ஓம் தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!

ஓம் எல்லாம் செயல் கூடும் என்னாணை அம்பலத்தே
ஓம் எல்லாம் வல்லான் தனையே ஏத்து.

ஓம் தாத்தா
வடலூர்ப் பெருவெளிப் பெருந்தகை
திருவருட் பிரகாச அருட்பெருஞ்சோதி ஆண்டவர்
அருட்கொடைவள்ளல் திருவருட் செல்வர்
ஞானசபைத் தோன்றல் வடலூர்க் கருங்குழி
வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகளாரே!
போற்றி! போற்றி! போற்றி! போற்றி! போற்றி!
சரணம்! சரணம்! சரணம்! சரணம்! சரணம்!"

**குருபாரம்பரிய வேண்டல் விண்ணப்பம்**

"அருளுலகப் பொருளுலக இருளகற்ற அருளாட்சி அமைப்போம். ஏக்கங்களையும் தேக்கங்களையும் போக்க சமுதாய மாற்றம் செய்வோம். மனித வாழ்வே புனித வாழ்வு. எங்கும் எதிலும் இனிமையை அமைதியை நிறைவை நிம்மதியை மகிழ்வை அன்பை அறவழியில் காண்போம்."

**ஞானாச்சாரியார் போற்றி**

"ஓம் அனாதிக் கருவூரரே போற்றி!
ஓம் ஆதிக் கருவூரரே போற்றி!
ஓம் தொன் மதுரைக் கருவூரரே போற்றி!
ஓம் தென் மதுரைக் கருவூரரே போற்றி!
ஓம் குமரியாற்றங்கரைக் கருவூரரே போற்றி!

ஓம் பஃறுளியாற்றங்கரைக் கருவூருரே போற்றி!
ஓம் கபாடபுரத்துக் கருவூருரே போற்றி!
ஓம் தாமிரபரணியாற்றங்கரைக் கருவூருரே போற்றி!
ஓம் வைகையாற்றங்கரைக் கருவூருரே போற்றி!

ஓம் ஐம்புலன்களும் காணவாழும் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, இந்துமதத் தந்தை, தத்துவ நாயகம், அருளாட்சி நாயகம், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரர் அவர்களே!

போற்றி! போற்றி! போற்றி! போற்றி!
சரணம்! சரணம்! சரணம்! சரணம்!

ஓம் ஐம்புலன்களும் காண வாழும் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி, இந்துமதத் தந்தை, தத்துவ நாயகம், அருளாட்சி நாயகம், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களே, அண்ட பேரண்ட அருட்பேரரசர் அவர்களே!

போற்றி! போற்றி! போற்றி! போற்றி
சரணம்! சரணம்! சரணம்! சரணம்!

மேலே குறிப்பிட்ட தமிழின ஆச்சாரியாரான, குருபீடமான, குருதேவரான பதினெண் சித்தர் பீடத்தின் மரபில், விந்து வழி வாரிசாகத் தோன்றியுள்ள பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, இன்று வாழும் குருதேவர்,

பத்தி ஆழி, சத்தி ஆழி, சித்தி ஆழி, முத்தி ஆழி,
அமரத் தரு, இறைமைத் தரு, இருடித் தரு, தெய்வீகத் தரு,
தவத்திரு, மறைத்திரு, மந்திரத்திரு, வேள்வித்திரு,
தாந்தரீக மூர்த்தி, ஞானமூர்த்தி, மந்தரமூர்த்தி, வேதமூர்த்தி,
நான்மறைவித்து, நான்முறைவித்து, நானெறிவித்து, நான்வேதவித்து,
ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி,
மகமீனுடையார், மிதுன இலக்கனமுடையார், சிம்மராசியுடையார்,
எட்டாம் பிறப்புடையார், நல்லிலக்கண மார்புடையார்,
அங்கவியல் இலக்கண நிறைவுடையார், நஞ்சுண்ட மேனியார்,
நூற்றெட்டுத் திருப்பதிச் சக்கரங்கள் கொண்டார்,
இருநூற்று நாற்பத்து மூன்று சத்தி பீடச் சக்கரங்கள் அடைந்தார்,
ஆயிரத்தெட்டுச் சிவாலயச் சக்கரங்கள் உறைந்தார்,
குருநிலை பதினெட்டுடையார், திருவோலக்க நிலை முப்பதுடையார்,
தேவகுரு, வேதகுரு, ஓதகுரு, குருதேவர்,
நாதகுரு, போதகுரு, வாதகுரு, மோதகுரு,
சுரகுரு, அசுரகுரு, அமரகுரு, வானகுரு,
யாககுரு, யோககுரு, போககுரு, மோககுரு,
கணகுரு, முனிகுரு, இருடிகுரு, அருவுருவ குரு,
ஞாலகுரு, ஞானகுரு, சித்தகுரு, சகடகுரு,
கருவோலக்க நாயகம், திருவோலக்க நாயகம்,
குருவோலக்க நாயகம், தருவோலக்க நாயகம்,
அருளோலக்க நாயகம், மருளோலக்க நாயகம்,
நாளோலக்க நாயகம், அருட்கொடை வள்ளல்,
பேரருள் வள்ளல், ஞான வள்ளல்,
ஞானபீடம், ஞானவேந்து, ஞானத்தந்தை,
கருகுல ஆதீனம், குருகுல ஆதீனம்,



# சிவராத்திரி பற்றி இந்துவேதம் கூறும் செய்திகள்

**[காரணோடை கருகுலத்தில் சமாது கொண்டருளும் இந்துவேத நாயகம், இந்துமத தலைமை ஆச்சாரியக் குருபீடம், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரர் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து எடுக்கப் பட்டது.]**

**"ஆகாய கங்கை ஏற்ற இரவாம்**
**மாக்கடல் கடைந்த நஞ்சுண்ட மரண இரவாம்**
**ஏகாயம் எண்ணற்ற கோடி தோற்றுவித்த இரவாம்**
**கூகா எனப் பிறர்கூடி அழா வண்ணம்**
**சாகா வரங்கள் வழங்கும் வகைதரு சிவராத்திரி**
**வாகாகக் கொண்டாடி தோதாகப் பிறவித் துயர் போக்கிடலாம்"**

**(இருக்கு வேதம் 3:7:23)**

1. கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்திலே மூலப் பதினெண்சித்தர்கள் குழு இம்மண்ணுலகில் வந்து இறங்கிய இரவு.

2. இம் மண்ணுலகில் பயிரினம், உயிரினம் தோன்ற ஆரம்பித்திட்ட இரவு.

3. பயிரின, உயிரினங்களுக்கும் இம்மண்ணுலகிற்கும் தலைவராக மனிசர் தோன்ற ஆரம்பித்திட்ட இரவு.

4. அண்டபேரண்டங்களிலிருந்து அடிக்கடி வந்திட்ட பதினெண்சித்தர் குழு ஆண்டுக்கு ஒருமுறை ஓரிடத்தில் ஒன்று கூடி இவ்வையக முன்னேற்றத்திற்காக, இம்மண்ணுலக முன்னேற்றத்திற்காக, இம்மாஞாலத்தின் முன்னேற்றத்திற்காக கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடல் சிந்தனை அரங்கம் நிகழ்த்திடும் இரவு.

5. ஆதிசிவனாரின் மகன் முருகன் சேவலோன் கலைகளைப் பயில ஆரம்பித்த இரவு.

6. ஆதிசிவனாரின் மகன் முருகன் தனது 32வது வயதில் அருளுலகத்தவரும், பொருளுலகத்தவரும் பெரும் கவலைக்குள்ளாகிடும் வண்ணம் தன்னை 18 படைவீடுகளில் உருவ அருவ சமாதியாக நிலைபேறு பெறச் செய்ய முடிவெடுத்த இரவு.

7. ஆதிசிவனார் தமது திருமகன் முருகனின் பரிந்துரைப்படி விண்ணுலக ஐவர் குழுவையும், மண்ணுலக ஐவர் குழுவையும் ஒன்று கூட்டி இருக்கு வேதத்திலுள்ள வாக்கு, வாக்கியம், வாசகம் என்ற மூன்றையும்; அசுரவேதம், அதர்வான வேதம், யாம வேதம் மூன்றையும் தனித்தனி வேதங்களாகப் பிரித்திட ஆரம்பித்திட்ட இரவு.

8. ஆதிசிவனார் கடலுள் மறைந்திட்ட இளமுறியாக் கண்டம் எனும் குமரிக் கண்டத்தில் இருந்திட்ட தென் இமயமலையின் அடிவாரத்தில் தென் இந்து, தென் யமுனை, தென் கங்கை என்ற மூன்று ஆறுகளும் கூடிய முக்கூடல் பகுதியில் பதினெண் சித்தர் மடத்திற்காக 'மோகம்சிதரு' நகரைத் தோற்றுவித்து முத்தமிழ்ச் சங்கத்தை நிறுவ ஆரம்பித்த இரவு.

9. ஆதிசிவனார் முத்தமிழ்ச் சங்கத்திற்காக 'மோகம்சிதரு நகரையும்' அருகிலிருந்த மருத மரக் காட்டில் 'மருத மரக்காட்டு நகர்' என்ற பொருளில் 'மருதை மாநகர்' என்ற மாநகரத்தை தோற்றுவிக்க ஆரம்பித்த இரவு.

10. ஆதிசிவனார் இந்து வேதத்திற்காகவும், இந்து மதத்திற்காகவும் பதினெண்சித்தர் மடத்தையும் பீடத்தையும் நிறுவுவதற்காக மோகம்சிதரு (மொகஞ்சதாரோ) நகரிலிருந்து சில கல் தொலைவில் 'அருட்பாநகர்' (அரப்பா) என்ற நகரைத் தோற்றுவிக்க ஆரம்பித்த இரவு.

11. ஆதிசிவனார் உருவாக்கிய பதினெண்சித்தர் மடத்தில் இந்துவேத நூல்களையும், பதினெண் சித்தர் பீடத்தில் இந்துமத நூல்களையும் அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியான முத்தமிழ் மொழி மூலம் கற்றுத் தேர்ந்து 'மனிசர்' என்ற நிலையிலிருந்து பக்குவப்

**எல்லா வழிபாட்டு நிலையங்களிலும் வழிபடக் கூடிய**
**எல்லா நிலையினரும் அருளைப் பெறுவதற்குரிய**

## கற்பூரச் சோதி வழிபாட்டு மந்தரம்

"கற்பூரம் பாக்கு வெற்றிலை பழம் தேங்காய்
பக்குவமாய்ப் பண்ணிய பலகாரங்கள் பலவும்
படைத்தேன் ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக!
அனைத்தையும் காத்திடுக! காத்திடுக! காத்திடுக!
அருள் செழித்திடுக! செழித்திடுக! செழித்திடுக!
எங்கும் நலம் விளைக! நலம் விளைக! நலம் விளைக!
நான்மறையே! நான்முறையே! நானெறியே! நான்வேதமே!
வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க!"

***யார் எங்கு எந்தப் பூசையைச் செய்தாலும் கற்பூரம் காட்டும்போது இந்த மந்தரத்தைச் சொல்லித்தான் கற்பூரத்தைக் காட்ட வேண்டும்.***

கற்பூரச் சோதிக்குப் பதிலாக எரிகின்ற எண்ணைத்திரி, எரிகின்ற அகல்விளக்கு, எரிகின்ற தீச்சட்டி முதலியவற்றின் சுடரால் ஆரத்திக் காட்டும் போதும் இந்தச் சோதி வழிபாட்டு மந்தரத்தைத்தான் கூற வேண்டும். (எந்தச் சோதி வழிபாடாக இருந்தாலும்)

**குறிப்பு**:- குண்டலி(னி)யை சித்தி செய்யும்போது தங்களுடைய உடலின் அங்கங்கள், ஆவி, ஆன்மா, ஆருயிர், சொந்தபந்தங்கள்....... முதலியவற்றைப் படையல் பொருளாக்கிச் செய்கின்ற வழிபாட்டிற்கும் இந்தச் சோதி வழிபாட்டு மந்தரத்தைத்தான் கூற வேண்டும். எனவேதான், குண்டலி(னி) மட்டும் பதினெண் சித்தர் பீடாதிபதிகளால் மட்டும்தான் நேரடியாக வழங்க முடியும்.

*... ... ... இப்பூசைமொழி; பசனைப்பாடல்கள் போல் கூட்டமாக அமர்ந்து பாடுவதற்காக அருளப்பட்டவை மட்டுமல்ல; தனிமனிதர்கள் உலகியல்களையும், ஐம்புலன்களையும் ஆருவது அறிவையும் வென்று; மனம் ஒன்றிய நிலையிலிருந்து ஓதுவதற்காகவே சிறப்பாக உலக மானுடர்க்கு அருளப்பட்டதாகும். இப்படி, இந்தப் பூசைமொழியை ஓதுபவர்கள் அனைத்து வகையான அச்ச, கூச்ச, மாச்சரிய, இச்சைகளையெல்லாம் எளிதில் வென்றிடலாம்; அருளை அநுபவப் பொருளாகப் பெற்றிடலாம்; பெற்ற அருளைப் பிறர்க்கு மருந்தாகவும் விருந்தாகவும் வழங்கிடலாம்; முப்பிறப்பினையும் புரியலாம்; தன்னைத் தானே கடவுளாக்குவதோடு, தான் விரும்புவனவற்றை எல்லாம் கடவுளாக்கலாம்; ஏற்கெனவே வழிபடு நிலையங்களில் உள்ள கடவுள்களை யெல்லாம் விழிச்சி நிலை, எழிச்சி நிலை, செழிச்சி நிலை, ஆட்சிநிலை பெறச் செய்திடலாம்; எப்பொழுதும் தன்னம்பிக்கையோடும், நிறைவோடும், நிம்மதியோடும், மகிழ்ச்சியோடும் வாழ்ந்திடலாம். எனவே, மானுடர் அனைவரும் மொழி, இனம், நாடு, மதம் கடந்து பதினெண் சித்தர்களின் பூசைமொழிகளைப் பயன்படுத்தி அவரவர்க்கு விருப்பமான அருள்நிலைகளையெல்லாம் பெற்றிடலாம் என்று அறிவிக்கப்படுகிறது.*

**ஞானாச்சாரியார்**

**சித்தர் அரசயோகிக் கருவூரர்**



தருகுல ஆதீனம், திருகுல ஆதீனம்,
திருமூல ஆதீனம், கருமூலப் பண்டாரம்,
அனாதியாதி கடந்த தம்பிரான்,
ஐந்தர நாயகம், ஐந்திர நாயகம், ஐந்திற நாயகம்,
ஐந்தீ வேட்டல் நாயகம், முத்தீ ஓம்பல் நாயகம்,
மந்தர பீடம், மந்திரபீடம், மந்திறபீடம், மாந்தரபீடம், மாந்தரீகப்பீடம்,
தந்தரபீடம், தந்திரபீடம், தந்திறபீடம், தாந்தரபீடம், தாந்தரீகப்பீடம்,
எந்தரபீடம், எந்திரபீடம், எந்திறபீடம், ஏந்தரபீடம், ஏந்தரீகப்பீடம்,
குண்டலிப்பீடம், குவலய குருபீடம்,
உலக மத ஆய்வாளர், உலகக் கபாலிக மதகுரு,
பரப்பிறம்மம், எல்லாம் வல்ல சித்தர்,
நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர்,
அருளாட்சி நாயகம், நான்குயுக நாயகம், தத்துவ நாயகம்,
அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார்,
இந்துமத ஆச்சாரியார், இராசிவட்ட நிறைவுடையார்,
பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, மடாதிபதி,
குருமகா சன்னிதானம், குருதேவர்,

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்**

அவர்களின் குருவுளத் திருவுள ஒப்புதலுடன் வேண்டுகின்றேன்."

"ஓம் தாத்தாக்களே போற்றி! ஓம் ஆத்தாக்களே போற்றி!"
**(ஒன்பது தடவைகள் கூறவும்)**

"ஓம் அனைத்து வழிபாட்டுக்குரிய உருவ, அருவ, அருவுருவ, உருவ அருவங்களே! போற்றி! போற்றி! போற்றி!"
**(பதினெட்டு தடவைகள் கூறவும்)**

----------------------------

## பதினெண் சித்தர்கள் அருளிய காயந்திரிகள்
## மந்தரம், மந்திரம், மந்திறம், மாந்தரம், மாந்தரீகம்

இந்த ஐந்தினையும் அவரவர் ஆர்வத்துக்கும், வசதி வாய்ப்புக்களுக்கும் ஏற்ப ஒன்றன்பின் ஒன்றாகக் கற்றுக் கொள்ளலாம். ஏதேனும் ஒரே ஒரு காயந்திரியை மட்டுமே கூட அன்றாடம் 108 முறை ஓதிப் பயிற்சி செய்தாலே போதும். ஒவ்வொரு நாள் ஓதுவதற்கும் பயன் உண்டு. ஓதமுடியாமல் போகின்ற நாட்களுக்கும் சேர்த்து முன்கூட்டியோ, பின்னரோ ஓதிடலாம். ஆனால், அன்றாடம் குறைந்தது எட்டு முறையாவது காலையிலோ, மாலையிலோ ஏதேனும் ஒரு காயந்திரியையாவது ஓத வேண்டும். காயந்திரியை எந்த அளவு ஒரு நாளில் அதிகமாக ஓதுகிறார்களோ அந்த அளவிற்குப் பயனுண்டு. [ஆவி, ஆன்மா, ஆருயிர் நலம், உடல்நலம், உளநலம், உலகியல், வாழ்வியல் நலங்கள் அனைத்தும் கிடைக்கும்].

**செய்முறை:**

**உடை:** கட்டாயமாக இடுப்பில் கட்டும் வேட்டி முழங்காலுக்கு மேல் இருக்கும் வண்ணம் சுருக்கியோ, மடித்தோ வைத்துக் கொள்ளப்பட வேண்டும். இடுப்பிற்கு மேல் எந்தத் துணியும் இருக்கக் கூடாது. பெண்கள் முழுமையான ஆடையுடன் **[ஈர உடை அல்லது துவைத்து உலர்ந்த ஆடை]** ஓதலாம். ஈரத்துணியாக இருந்தால் அதற்கெனத் தனிப்பயன் உண்டு.

**மெய்ச்சுத்தம்**: நீராடி முடித்தவுடன் செய்தல் மிகச் சிறந்தது; அல்லது முகம், கை, கால்களைக் கழுவியபின் ஆரம்பிக்க வேண்டும்.

**அணிகலன்**: உருத்திராக்கம், மணிமாலை, மந்திரித்த முடிச்சுகள் போட்ட கயிறு, தாயத்து, வில்லை..... முதலியவற்றுள் ஏதேனும் ஒன்றையாவது கழுத்தில் அணிந்திருக்க வேண்டும். வலதுகை மணிக்கட்டில் பசிய கொடி அல்லது நூல் அல்லது செப்புக்கம்பி வளையம் ஏதேனும் ஒன்று அணிந்திருந்தால் சிறப்புடையது **[பூசை நேரத்தில் மட்டுமாவது]**. திருநீறு, குங்குமம், சாந்து, சந்தனம், மை, திருமண் எனும் ஆறில் ஏதேனும் ஒன்றையாவது நெற்றி, கழுத்து, மார்பு, இருகைகள் ஆகிய இடங்களில் பூசாவிதிப்படி அணிந்திருக்க வேண்டும்.

**இருக்கை நிலை:** சம்மணமிட்டு அமர்தல், குத்தவைத்து அமர்தல், நாற்காலியில் அமர்ந்து கால்களைத் தொங்க விட்டுள்ள நிலை, நின்ற நிலை என நான்கு நிலைகளில் கூறலாம். குருபீடம், ஆச்சாரியார் என்ற நிலையில் உள்ளவர்கள் மட்டும் படுத்த நிலையில் கூறிடலாம்.

**அருளேற்று நிலை**: நீர்த்துறையிலே (ஆறு, குளம், கிணறு) அமர்ந்தால் அப்பொழுது சூரியன் எந்தத் திசையில் இருக்கிறதோ அந்தத் திசையைப் பார்த்து இருக்க வேண்டும். பூசைமொழியைச் சொல்லும் போது ஒவ்வொரு முறையும் சின்முத்திரை நிலையில் வலது கையை வைத்துக் கொண்டு தண்ணீரை அள்ளிப் பூசாமொழி கூறி முடித்தவுடன்; உள்ளங்கையின் அடிப்பாகத்தில் கீழுதட்டை வைத்து உறிஞ்சிப் பருகிட வேண்டும். பூசைமொழியை நான்கு முறை கூறி முடித்த பிறகோ அல்லது எட்டு முறை கூறி முடித்த பிறகோ கூடத் தண்ணீரைப் பருகலாம். நீர்த்துறையில்லாமல் வீட்டில் அமர்ந்து செய்யும் போது ஒரு குவளையில் நீர் வைத்துக் கொண்டு சிறிய கரண்டியினால் பூசைமொழி 4 முறை அல்லது 8 முறை கூறி முடித்த பிறகு நீர் அள்ளிப் பருகிடலாம்

**குறிப்பு:**

பொதுவாக அருளேற்றிக் கொள்ள விரும்புகிறவர்கள் அல்லது அருளுலக ஆதரவுகளை விரும்புகிறவர்கள் சித்திக் காயந்திரி மந்தரம், சத்தி காயந்திரி மந்திரம், அருட்சினை மந்திறம் ஆகிய மூன்றையும் அன்றாடம் 48 முறை மட்டும் ஓதினால் போதும். இதனை ஒரே வேளையில் 48 முறை ஓதிடலாம்; அல்லது காலையில் 24 முறை, மாலை 24 முறை எனப் பிரித்தும் ஓதிடலாம்.

இதைச் சொல்லும் போது ஏதேனும் படையல், ஊதுபத்தி, கற்பூரம் காட்டி நீர் வலம் காட்ட வேண்டும்.

இப்படிப் பூசைமொழி ஓதுவதே மானுட வாழ்வின் தொல்லைகளையும், துன்பங்களையும் சந்திக்காமலிருப்பதற்காக அருளுலகத்தவர்களை வணங்கி வழிபட்டிடும் ‘சந்தியா வணக்கம்’ (வந்தனம்) என்று குறிக்கப் படுவதாயிற்று.

**காயந்திரி பூசாமொழி சொல்லுவதற்கு முன்னும் பின்னும் சொல்ல வேண்டிய வேண்டுகோள் வாசகங்கள்:**

***“ஓம் நமச்சிவாய பராசத்தி சிவாயநம***
***ஓம் சிவாயநம பராசத்தி நமச்சிவாய***
***ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி!***
***ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி!***
***ஓம் சிவவசி! ஓம் சிவவசி! ஓம் சிவவசி!***
***ஓம் சிவவசி! ஓம் சிவவசி! ஓம் சிவவசி!***
***ஓம் உண்டங்களே! பிண்டங்களே!***
***உயிரினங்களே! பயிரினங்களே!***
***அண்டங்களே! பேரண்டங்களே!***
***அண்டபேரண்டங்களே!***
***விழிச்சி கொள்க! எழிச்சி கொள்க! செழிச்சி பெறுக!***
***யாமே அனைத்துமாக உதவுக!***
***காயந்திரி மந்தரம் கூறுகிறேன்;***
***பயனாகட்டும்! சுவையாகட்டும்!***
***முற்பிறப்பும், மறுபிறப்பும் இப்பிறப்பிலேயே நிறைவாகட்டும்!***
***ஆவி, ஆன்மா, ஆருயிர் மூன்றும் ஒன்றாகட்டும்!***
***அனைத்துக்கும் தாயாக! ஆயாவாக!***
***அப்பனாக! தாத்தாவாக! இருப்பவர்களே!***
***ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக!”***
***காத்திடுக! காத்திடுக! காத்திடுக! காத்திடுக!***

**சென்ற இதழில் வெளியிட்ட வேண்டுகோள் வாசகத்தினை விட இங்கே கொடுக்கப்பட்டுள்ள வாசகத்தில் சிறிது மாறுபாடு இருப்பதைக் காணலாம். 1984இல் முதலில் இந்தப் பூசைமொழியை வெளியிட்டுப் பூசைகள் பலகாலம் நடத்திய பின் 1990இல் குருதேவர் அவர்களாலேயே இந்த மாற்றம் செய்யப்பட்டது. இங்கே கொடுக்கப் பட்டுள்ளது 1990இல் எழுதப்பட்டது.**



*உறையினின்று வாளை எடுத்து உள்ளே போடுவது போல் காயந்திரி மந்தரம் சொல்லுவதற்கு முன்னும் பின்னும் இந்த வேண்டுகோள் வாசகங்களைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாசகங்களைப் பூசையின் ஆரம்பத்தில் கற்பூரம் ஏற்றியோ, சாம்பிராணி காட்டியோ, ஊதுபத்தி காட்டியோ, யாகம் வளர்த்தோ, விண்மீன் பார்த்தோ, சூரியன் பார்த்தோ, நிலவு பார்த்தோ ஒரு முறை சொல்லப்பட்டவுடன் காயந்திரி மந்தரம் (108) நூற்றெட்டுத் தடவைகள் ஓதப்படல் வேண்டும். பூசை முடிக்கும் போது மேற்படி வாசகங்கள் ஒரு முறை சொல்லப்படல் வேண்டும். பக்குவத்துக்கேற்பக் கண்ணை மூடியோ திறந்தோ காயந்திரி பூசாமொழி ஓதலாம். ஓதும்போது இடையிடையே கண்ணைத் திறந்தும் மூடியும் ஓதலாம்*

.

**தலைவனையறிந்து தன்னையறியப் பயன்படும்**

## அருட்சினை மந்திறம்

“வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயே உனைவாழ்த்தி வணங்குகின்றேன்.

ஏனோவாகி இன்னல் பல்லாற்றானும் உழல்பவர்க்கு
நானாகிய அடியேன் நலம் வேண்டுகின்றேன்.
தானாகவே தழல்தரு கொடுமைமிகு துயரமெல்லாம்
வீணாகி விலகியோடி ஒழியட்டும்”

**அருள் + சினை = அருட்சினை என்பதே உச்சரிப்பு மாற்றப் பட்டு ‘அர்ச்சனை’ என்றாகி விட்டது.**

***எந்த வழிபாட்டிலும் அருளுலகத்தாரிடமிருந்து அருளைப் பெறுவதற்காகக் கூறும் பூசைமொழியே இந்த “அருட்சினை மந்திறம்”.***

**தன்னையறிந்து தலைவனையறியப் பயன்படும்**

## அருளூறு காயந்திரி மந்தரம்

(சத்தி காயந்திரி மந்தரம்)

“ஓம் பூர்வ புலன்கள் சுவையாகுக!
தத்துவ வித்துக்கள் அரணாகுக!
பாரின்கோ தேவர் வசிக்கும் தீ மகிழட்டும்
தீயே யோகப் பரஞ்சோதி யாகும்!”

***ஒவ்வொருவரும் அன்றாடம் தனித்துப் பூசைகளில் 108 முறை ஓதி அருளைப் பெறும் காயந்திரி மந்தரம்.***

**தலைவனுக்குள் தன்னை நிறுத்தித் திரம் (வலிமை) பெற்றிடுவதற்காக ஓதும்**

## அருளூறு காயந்திரி மந்திரம்

(சத்தி காயந்திரி மந்திரம்)

“ஓம் சத்தியே காத்தாயி அயனாய வித்தின் மகவே
வாலையே கன்னியே குமரியே நங்கையே தீயென மலர்ந்திடு
தீயே உன்னோடு தூர்த்திடு பிறச்சினை யாவும்
தாயே என்னோடு உயிரினப் பயிரினக் காப்புவழங்கிடு.”

***தனித்தும், பிறரோடு கலந்தும் அன்றாடம் பூசைகளில் 108 முறை ஓதி அருளுலகத் திரத்தை (வலிமையை) வளர்த்துக் கொள்ள உதவுவதே இந்தச் சத்திக் காயந்திரி மந்திரம்.***